வளமுடன் வாழ!

ஒன்றாக நல்லது கொல்லாமை

வரமருள் வேலா!!

கௌமார அமுதம்

ஒளி : 22
கதிர் : 01

விலை
ரூ. 10.00

கௌமார மடாலய
நிகழ்ச்சிகளை
நேரலையில் காண

சுபகிருது ஆண்டு பங்குனி மாதம் (மார்ச்-2023)



பேரூராதீனம் அருள்மிகு அம்பலவாணர் திருக்கோயில்
ஆதிகுரு முதல்வர் அருள்மிகு சாந்தலிங்கப் பெருமான்
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுத் திருவிழா 03.03.2023

சிறப்பாசிரியர்
திருப்பெருந்திரு. இராமானந்த குமரகுருபர சுவாமிகள்









ஈரோடு, பெருந்துறை, தென்முகம் வெள்ளோடு, நடுப்பாளையம்
அருள்மிகு சித்தி விநாயகர், அருள்மிகு வேம்பரசு விநாயகர் அருள்மிகு
மாரியம்மன் அருள்மிகு மாகாளியம்மன் அருள்மிகு முனியப்பசாமி
திருக்கோயில்கள் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா...



வேலூர், இரத்தினகிரி அருள்மிகு முருகப்பெருமான்
திருக்கோயில் திருக்குட நன்னீராட்டுப் பெருவிழா மற்றும்
அறுகோணத் தெப்பக்குளம் திறப்பு விழா



ஒன்றாக நல்லது கொல்லாமை

கௌமார அமுதம்

திருவள்ளுவராண்டு 2053
சுபகிருது பங்குனி
ஒளி : 22 கதிர் : 01
2023 மார்ச்

திருப்பெருந்திரு. **இராமானந்த குமரகுருபர சுவாமிகள்**

சிறப்பாசிரியர்

***

ஆசிரியர் குழு
அழ. முத்துப்பழனியப்பன்
கு. சிவலிங்கம்
கா. உமாபதி

***

நிழற்படம்
பெ. ரமேஷ்

***

அச்சிட்டோர் :
ருக்மணி ஆப்செட் பிரஸ்
E-32, சிட்கோ இண்டஸ்ட்ரியல் எஸ்டேட்,
கோயம்புத்தூர் - 641 021.
போன் : 0422 2672789

பொருளடக்கம்

சந்தா விபரம்

தனி இதழ்	ரூ.10.00
ஆண்டுச்சந்தா	ரூ.100.00
ஆயுள் சந்தா	ரூ.1000.00

கௌமார அமுதம்
ஆசிரியர், கௌமார மடாலயம்,
சின்னவேடம்பட்டி (அஞ்சல்)
கோவை - 641 049. போன் : 2666370
இணையதளம்: *www.kaumaramutt.org*
மின் அஞ்சல்: *kaumaramutt@gmail.com*

உங்கள் சிந்தனைக்கு......

முன்சொல் அறங்கள் முழுமையினும் மிக்கதெண்ணில்
இன்சொல் உணர்ந்துரைப்பதே.

- வருக்கக் குறள்

அறங்களில் யாவற்றிலும் சிறப்பான அறம் யாதெனில் மற்றவரிடத்து இனிமையான சொல்லை உரைப்பதே ஆகும்.

மறைமொழி

தவத்திரு. இராமானந்த குமரகுருபர சுவாமிகள்
சிறப்பாசிரியர்

சென்ற இதழின் தொடர்ச்சி:

அதற்கு பாலமுருகன் தன் தந்தையை வணங்கி, கைகூப்பியவராக "தந்தையே! நான் தோழர்களோடு உற்சாகமாக விளையாடிக் கொண்டிருந்த போது பிரும்மதேவன் என்னைச் சிறிதும் மதிக்காமல் அலட்சியத்தோடும் திமிரோடும் உங்கள் மாளிகைகக்குச் சென்று வெளியே வந்தார். நான் பிரும்மாவை நோக்கி தாங்கள் யார்? உம்முடைய தொழில் என்ன? நீர் தங்குமிடம் எங்கு இருக்கிறது? நீர் எதுவரையிலும் படித்திருக்கிறாய்?" எனக் கேட்டேன்.

உடனே பிருமனும் "தான் யார்? தன்னுடைய தொழில் என்ன? என்பதைப் பற்றிய விவரத்தையும், தனக்குப் பதினெட்டு வித்தைகளிலும் தான் தேர்ச்சி பெற்றவன் என்பதை என்னிடம் பெருமையாய்ச் சொன்னார். உடனே நான் மறுபடியும் அவரை நோக்கி, வேதங்களுக்கு ஆதியாகிய உயிரெழுத்தையும் அந்த ஓம் என்ற பிரணவ மந்திரத்திற்குப் பொருள் என்ன என்பது பற்றியும் அவரிடம் விளக்கம் கேட்டேன். ஆனால் பிரும்மாவோ அதற்கு தவறான விளக்கத்தையே என்னிடம் சொன்னார்.

மகாமந்திரமான பிரணவத்திற்குச் சரியான பொருளைக்கூடக் கூற முடியாமல் மாறான பொருளைக் கூறிய காரணத்தால் நான் அவரைச் சிறையில் அடைத்து விட்டேன்!" என்று கூறினார்.

உடனே முக்கண்ணன் மகிழ்ச்சிப்பெருக்கோடு மைந்தனின் இரு கன்னக் கதுப்புகளிலும் முத்தமிட்டு "முருகனே! அந்தப் பிரணவப் பொருளை தேவர்கள் முன்னிலையில் நீயே கூறு பார்க்கலாம்!" என்றார்.

ஆனால் பாலமுருகனோ தம் தந்தையை வணங்கி "அப்பா! பரம ரகசியமான அதன் உட்பொருளை, தேவர்களுக்கு முன்பாக நான் எப்படித் தெரிவிப்பேன்? ஆதிகுருவான தங்களின் முன்னிலையில் நான் எப்படி அதைச் செய்ய முடியும்? மந்திரத்தை வெகு திறமையோடு இரகசியமாக மறைத்து வைத்திருக்கவேண்டும்! இதுதான் நியதி! இம்மாதிரிச் செய்யாதவன் நரகத்தையே முடிவில் அடைவான். இது

தாங்கள் விதித்துள்ள விதிமுறைதான்! இப்படிப்பட்ட தங்களுடைய கட்டளையை உலகத்திலுள்ள மானிடர்களோ. தேவர்களோ, அசுரர்களோ, ஒருவருமே மீற முடியாது!'' என்று கூறினார். அதைக் கேட்டதும் பரமசிவனும் தம் மகனை அணைத்து மகிழ்ந்து தம் மடிமீது உட்கார வைத்துக் கொண்டு, ‘‘குழந்தாய்! அந்தப் பரம ரகசியமான பிரணவத்தின் உட்பொருளை என் காதில் ரகசியமாகச் சொல்! இதைக் கேட்க நான் ஆவலாக இருக்கிறேன்!'' என்று கோரினார்.

உடனே கந்தவேலனும் தம் தந்தையை மகிழ்ச்சியோடு மனதால் வணங்கி, அவருக்குப் பிரணவத்தின் உட்பொருளை பரமரகசியமாகத் தனிமையில் உபதேசம் செய்தார். அதைக்கேட்டு தெரிந்து கொண்ட மகாதேவனும் ‘‘ஆமாம் பிரணவத்தின் உட்பொருள் இதுதான்! வேதத்தில் சுப்ரமண்யோம் என்று கூறியுள்ளபடி நீயும் ‘‘சதாசிவோம் என்று கூறியுள்ளபடி நானும், ஆக நாம் இருவருமே அத பொருளாக அமைந்திருக்கிறோம். இவ்வாறான பொருளை இந்த உலகத்தில் யார் அறிந்துணர்கிறார்களோ, அவர்கள் எனக்கு நிகரானவர்களாக ஆகிறார்கள். சர்வ வேதாந்த விஞ்ஞானங்களினால் நிலைத்த புத்தி அடைந்த சாதுக்களுக்கும். சுத்த சத்வகுணமுள்ள சந்நியாசிகளுக்கு இந்தப் பிரணவத்தின் உட்கருத்தை உணர்ந்து கொள்வதற்கு, பரப்பிரம்மத்தை அடைவதற்கு உரிய முக்கிய கருவியாகும் என்றார்.

பிறகு அவர், ‘‘புத்திரனே! குமாரனே! பிரணவ மந்திரத்தின் திவ்வியமான கருத்து உன்னால் கூறப்பட்டிருப்பதைப் பதவிக் கர்வத்தில் அமிழ்ந்திருக்கும் அந்த பிரும்மாவால் எப்படி அறிந்து கொள்ள முடியும்? அவர் மட்டும் என்ன? தியானத்தால் தீவினைகளைப் போக்கிக் கொண்ட தவசீலர்களால் அந்தப் பிரணவத்தின் உட்பொருளை எளிதில் உணர்ந்து கொள்ள முடியாது.

என்னுடைய அருள் பெற்ற பக்தர்களால் மட்டும்தான் அறிந்து கொள்ள முடியும். மகனே! நீ உண்மையான என்னுடைய ஆத்மாவாக அமைந்திருப்பதால் அத்தகைய அதியற்புதமான பிரணவத்தின் அர்த்தத்தை அறிந்து வைத்திருக்கிறாய். முனி சிரேஷ்டர்களிலும், அகத்தியர் ஒருவரைத் தவிர, இதன் உட்பொருளை அறிந்து கொள்ளும் தகுதி வேறு யாருக்குமே இல்லை! ஆகையால் என்னுடைய விருப்பத்தின் பேரில் இந்தப் பிரணவத்தின் அர்த்தத்தை அகத்திய மாமுனிவருக்கு நீ தெளிவாக உபதேசிக்க வேண்டும்! அதன் மூலமாக அந்த பிரணவ மந்திரமானது பரம்பரையாக விட்டுப்

போகாமல் என்றும் நிலைத்து நிற்கும் குமாரனே! அந்த அகத்திய முனிவரோ உனக்குப் பின் சீடனாக இருப்பார். உன் மகனைப் போலவே அவர் காத்து வர வேண்டும்!" என்று கூறிவிட்டு கைலாயத்திற்குத் திரும்பிச் சென்றார்.

ஒரு கணப்பொழுதும் மனம் ஒரு நிலை பெற்று
உன்பதம் நினைத்திலேன் எனினும்,
கருணை அம் கடல் நீ என்னை எவ்விதத்தும்
கை விடாது ஆள்; அடைக்கலம் யான்;
மருமலி பொதியைத் தமிழ்முனி அன்பால்
வணங்கிட அரன் வலச் செவியில்
தரு மறைப் பொருளை அருள் செய்வாய்இரங்க
சாமியூர்த் தண்டபாணியனே!

மனமானது உறுப்பைப் போன்று இல்லாமல் கண்ணுக்கு புலப்படாத ஒரு புலனாகச் செயல்படக்கூடியது. அத்தகைய விதத்தில் அந்த மனதினை ஒரு நிலையாக வைத்து வாழ்வது கடினமான செயலாகும்.

யோகிகள், தவ வலிமை உடையோர் சித்தர்கள் இவர்களுக்கு மட்டுமே மனதை ஆள்வது எளிதான செயலாகும். இதனை தவத்திரு கந்தசாமி சுவாமிகள் கூறும் போது, ஒரு கணப்பொழுதும் தன்னுடைய மனத்தை நிலையாக வைத்துக் கொண்டு இறைவனை எண்ணி நினைக்கவில்லை இருப்பினும் அவனுடைய பதத்தை எண்ணாது வாழும் என்னையும் அவன் தன்னுடைய கருணையாகிய கடலில் சேர்த்து கைவிடாது காக்கின்றான்.

அவன் பதமே துணை என அடைக்கலம் அடைவோர்கும், அவன் நாமம் உரைப்போர்க்கும் கருணை தந்து காக்க கூடியவன் முருகப்பெருமான். அதனையே சுவாமிகள் உன்னை ஒரு கணமும் எண்ணாத என்னுடைய இந்த மனமானது நிலையான மனம் அல்ல அத்தகைய சூழ்நிலைகளும் என்னை கைவிடாது காக்கின்ற உன்னுடைய செயலை எண்ணி வியக்கின்றேன் என்று பாடுகின்றார்.

மனதை அடக்கும் நெறிப்படுத்தும் வழிமுறையினை திருவள்ளுவர் எடுத்துரைத்துள்ளார்.

ஒருமையுள் ஆமைபோல் ஐந்தடக்கல் ஆற்றின்
எழுமையும் ஏமாப் புடைத்து என்று கூறியிருப்பார்.

தொடரும்...

தவத்திரு.கந்தசாமி பனுவல்திரட்டு

தென்கயிலாயச் சத்திநாயக மாலை மூலமும் உரையும்

- சொல்லரசு. வீ. சிவஞானம், கோவை

சென்ற இதழின் தொடர்ச்சி:

33 சின்மய ஆனந்தக் கடல் முகந்து எழுந்த
செழு முகில் எனக் கவி பொழிந்து,
கல் மனம் கரையக் கண்கள் நீர் உகுத்து, உள்
காட்சி கண்டு, ஏத்த என்று அருள்வாய்?
எல் மறைதரத் தோற்றிடு துணங்கறலை
இலங்கு சோதித் தரு விழியால்
வில் மதன் கடுப்ப எரிக்கும் தென்கயிலை
வித்தகா! சத்தி நாயகனே!

அருஞ்சொற்பொருள்: சின்மய - ஞானமய. ஆனந்த - பேரின்ப. முகில் - மேகம். ஏத்த - போற்ற என்று எப்பொழுது. எல் - சூரியன். துணங்கறலை - இருளை. சோதி - விளக்குகின்ற ஒளி. தருவிழி - தருகின்ற கண் (நெற்றிக் கண்). மதன் - மன்மதன். கடுப்ப - போல.

பொழிப்புரை: சூரியன் மறையும் போது தோன்றும் இருட்டை (ஆணவ மல இருட்டு என்றும் கொள்க) விளங்கும் ஒளியைத் தரும் நெற்றிக் கண்ணால், வில்லேந்திய மன்மதனை எரித்தது போல எரிக்கும் தென்கயிலை மலையாய் விளங்கும் வித்தகமே! சக்தியின் நாயகனே!

ஞானமயப் பேரின்பக் கடலை முகந்து எழுந்த வளமான மேகம் போல கவி மழை பொழிந்து, கல் போன்ற கடினமனம் கரையவும், கண்கள் நீரினைச் சொரியவும், உள்ளத்தில் நினது திருக்காட்சி கண்டுப் போற்றுவதற்கு எப்பொழுது அருளப் போகிறாய்?

34. இகல்படு காலன் இருள் உடல் மீதில்
இருத்தும் நின் தாள் துணை, அடியேன்
துகள் அறப் பலகால் இரந்தும், என் சிரமேல்
சூட்டிட இரங்கிலை; என்னே?
திகழ் கரிமுகன் அம் குறிஞ்சி வேந்து உவகை
சிறந்து மேல் இவர்ந்தனர் ஆட
விகசித வரையா விளங்கு தென்கயிலை
வித்தகா! சத்திநாயகனே!

அருஞ்சொற்பொருள்: இகல் - பகை. இருள் - கருமை. துகள் - மலங்கள். . அம்குறிஞ்சி - அழகிய குறிஞ்சி நிலம். வேந்து - அரசன் இவர்ந்தனர் ஏறினர். விகசித - மகிழ்ச்சியால் மலர்கின்ற.

பொழிப்புரை; யானை முகமுடைய விநாயகப் பெருமானும், அழகிய குறிஞ்சி நிலத்துக்குத் தலைவனாய் விளங்கும் முருகப் பெருமானும், ஏறி விளையாட, மகிழ்ச்சி ததும்பும் மலையாய் விளங்கும் தென்கயிலை வித்தகனே! சத்தியின் நாயகனே!

போரிடும் இயல்புடைய இயமனது கரியநிற உடல்மீது (மார்க்கண்டேயனுக்காக) ஊன்றிய நினது இணையான திருவடிகளை, அடியேனது மலக் குற்றங்கள் நீங்க, என் தலைமீது ஊன்றுமாறு, பல முறை கெஞ்சிக் கேட்டும், இரக்கம் காட்டவில்லை; இதனை என் என்பது!

35. காடு அழைத்து உறுவீடு ஏகு எனச்சாற்றும்
காலம் எய்தியும்கருத்திடை மூ
ஏடணை ஒழித்து உன் திருவடித் துணைகள்
எண்ணிலேன் கண் இலேன்; அந்தோ!
மீள்தல் இல் அன்பு ஆர் திண்ணன் வாய் அமுத
வேட்கை மிஞ்சலின், இனம் இசைந்த
வேடர்தம் மிகை கொண்டு இலகு தென்கயிலை
வித்தகா! சத்திநாயகனே!

அருஞ்சொற்பொருள் : ஏகு - போ.. சாற்றும் - சொல்லும். மூ - மூன்று. ஏடணை - விருப்பம்.. (அவை மண், பொன், பெண்) . திண்ணன் - கண்ணப்ப நாயனார்.

பொழிப்புரை: சற்றும் குறைவுபடாத அன்புடைய கண்ணப்ப நாயனாரின் வாய் அமுதத்தின் (எச்சிலின்) மீது எழுந்த விருப்பம் மிகுதியானதால், அவர் சார்ந்த வேடர் குலத்தார் அதிகம் வசிக்கும் மலையாய் விளங்கும் தென்கயிலை வித்தகனே! சத்தியின் நாயகனே!

காடு வாவா என்று அழைக்க, வீடு போபோ என்று சொல்லும் காலம் வந்துற்ற பின்னும், எண்ணத்தில் மண், பொன், பெண் என்னும் மூன்றன் மீதும். கொண்ட விருப்பத்தைத் துறந்து, நினது இணையான திருவடிகளை நினைவு செய்யவில்லை; அறிவுக் கண் கொண்டு காணாத அறிவிலியாகிய குருடனாய் இருக்கிறேன், அந்தோ! (இது பரிதாபத்திற்கு உரிய நிலை).

சுந்தரர் சொற்றமிழ்
பெரியநாயக்கன்பாளையம்
சித்திபுத்தி விநயாகர் பதிகம்

- தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள்

சென்ற இதழின் தொடர்ச்சி:

605. சீர்த்த நம்பியாண் டார்விருப் பப்படி
செய்யும் பூசனை உண்டியை உண்டபின்,
பார்த்தி பன்வின விப்புவி யோர்கள் பால்ப்
பகர்தல் போல்வண்டியில்ப்பலர் அன்பினால்ப்
பார்த்த வர்வியக் கத்தகும் உண்டிகள்
படைத்த யாவையும் ஓர்கணத் தேஉண்டு
தீர்த்த வா !நற் பெரியநாய்க் கப்பதிச்
சித்தி புத்தி விநாயகத் தெய்வமே !

பொருள்:சீர்த்த - சிறப்புப் பொருந்திய. திருநாரையூர் நம்பியாண்டார் நம்பி - வரலாறு வெளிப்படை. பார்த்திபன் - அரசன் ஆகிய இராஜராஜ சோழன். வினவி - கேள்விப்பட்டு வண்டிகள் - உணவு வகைகள்.

606. மெய்ப்பு கழ்த்தவ வேதவி யாசர்முன்
விளம்பு பாரத வண்கதை மேருவில்க்
கைப்பொ ருந்தொரு கொம்புகொண் டேவரை
கத்த னே !நித்த னே ! மத்த வேழமே !
இப்பு விக்கண்முன் தில்லையில் மூவர்சொல்
இனிய பாடல் இருக்கும் இடத்தினைச்
செப்பு வாய் ! எழில்ப் பெரியநாய்க் கப்பதிச்
சித்தி புத்தி விநாயகத் தெய்வமே

பொருள்: விளம்பி - இயற்றிச் சொல்லிய. கைப் பொருந்து - கரத்தில் பிடித்த. கந்தனே தலைவரே. வியாசர் சொல்லச் சொல்ல விநாயகர் பாரதத்தை எழுதிய வரலாறு வெளிப்படை. நித்தனே - அழிவற்றவரே. மத்த வேழமே மதயானையே. நம்பியாண்டார் நம்பிக்குப் பொள்ளாப் பிள்ளையார் தில்லைக் கோயிலில் தேவாரத் திருமுறைகள் இருந்த இடத்தைக் காட்டியருளினார்

தொடரும்...

சைவப் பெருங்கருணை சேக்கிழார்

திருமதி மகேஸ்வரி சற்குரு

சென்ற இதழின் தொடர்ச்சி:

வேட்டை அறம் கொண்டு விலங்குகளை வேட்டையாடுதலை இயற்கை அன்னையின் ஒப்புதலோடு திண்ணன் குலத்தார் செய்து வந்தனர். ஏதோ ஒரு நாள் ஒவ்வொருவருக்கும் முதன்மையான நாளாக அமையும் என்பது விதி. அந்த ஒரு நாள் மெல்லவே வந்து சேர்ந்தது திண்ணனுக்கு மிகவும் கொழுத்த பன்றி ஒன்று போக்கு காட்டி ஓடிச் செல்ல வேட்டைக்குச் சென்ற திண்ணன் குழுவினர் வேகமாக ஓடினர். குத்திட்டிகளை தீவிரமாக வீசினர். நாணன் உள்ளிட்டோர் வேகமாகத் துரத்தினர். திண்ணனோ சற்று சிந்தனை செய்து தனது உடைவாளை எடுத்து அதன் வேகம் மட்டுப்படும் வரை காத்திருந்து சுடர்விடும் வாளால் அதனை இரண்டு துண்டுகள் என வெட்டினான். நண்பர்களுக்கு மிகப்பெரிய திருப்தி ஆயினும் மிகுந்த தூரம் ஓடிய களைப்பும் பசியும் ஏறத்தாழ மயக்க நிலைக்கு வர, நீர் அருந்தி இளைப்பாரிச் செல்லலாம் என்றனர். திண்ணனார் தனது திருவாய் மலர்ந்து கேட்ட கேள்வி தின்னனுக்கான கடை தேற்றக் கேள்வியாகும். தண்ணீர் இவ்வனத்தில் எங்கே நன்றுள்ளது? நாணன் சொல்லிய பதில் குன்றினுக்கு அயலே ஓடும் குளிர்ந்த பொன்முகலி: குன்றாக சிவனே நிற்கின்றான், கங்கை நதியென பொன்முகலியும் ஓடுகின்றது என்று சேக்கிழார் முன்பே சொல்லிவிடுகிறார் போலும்.

ஆக சுவை மிகுந்த அந்த பொன்முகலி ஆற்றுச் சோலையை அடைந்த குழாம் திண்ணன் முகத்தைப் பார்த்து, எல்லோரும் களைப்பு மேலிட இருக்க திண்ணன் மட்டும் நாணா நீ குன்றின் மேல் குடுமித் தேவன் இருப்பான் என்று சொன்னாயே! அந்த தேவனைத்தான் நான் முதலில் காண வேண்டும் என்றான். உடன் வந்த காடனிடம் நீ பன்றியைச் சுடுவதற்கான நெருப்பைத் தயார் செய் நானும் நாணனும் திருகாளத்திமலைத் தேவனைக் கண்டு திரும்புகிறோம் என்றான் திண்ணன்.

தேனீக்கள் ஒலி அந்த ரிங்காரம், சிறு பறவைகளின் கத்தல் ஓசை எல்லாம் இணைந்து திருக்காளத்திமலையின் தேவகாணமாகத் திண்ணன் உணர்ந்தான். கால்கள் மட்டும்

மலையேறிக் கொண்டிருக்க மனமோ குடுமித்தேவனின் அழகைக் கண்டவரே படியேறியது. ஜடா முடிகள் தரிக்காத சிவ யோகிகளாக இருவரும் நீண்ட சடை முடியுடன் பிறைசூடி விளங்கும் எம்பெருமான் சிவபெருமானைக் காணும் முன் இறைவனின் கடைக்கண் பார்வை நேர் பார்வையாகத் திண்ணனார் மீது விழுந்தது அப்பார்வையின் ஒளி வெள்ளம் பட்ட மாத்திரத்தில் திண்ணனார் சிவன் பால் அன்பே உருவானார் கண்களைப் பற்றிச் சேக்கிழார் முன்னமே குறிப்பு காட்டுவது பின்னர் வரும் தெய்வ செய்தியைக் கூறுவதற்கான முன்னேற்பாடல்லவா? அந்தப் பாடலைப் பார்ப்போம்.

திங்கள் சேர் சடையார் தம்மைச் சென்றவர் காணா முன்னே
அம் கண்ணர் கருணை கூர்ந்த அருள் திரு நோக்கம் எய்தத்
தங்கிய பவத்தின் முன்னைச் சார்பு விட்டு அகல நீங்கிப்
பொங்கிய ஒளியின் நீழல் பொருவில் அன்பு உருவம் ஆனார்(753)

திருநாவுக்கரசர் எவ்வாறு இறைவனின் திருவடி நிழல் தென்றல் ஒத்த குளிர்ச்சியைத் தனக்குத் தந்தது என உருக்கத்துடன் சொன்னாரோ, அவ்வாறே திண்ணனார் உணர்ந்தார். தனது குடும்பம் கானகம், வேட்டை, நண்பர்கள் அத்தனையும் மறந்து போய் பவள மேனிச் சிவனாம் திருவடி போற்றும் காதலானாகி கண்ணீர் மல்க நின்றார்.

பின்னர் ஓடிப்போய் சிவத்திரு மேனியை தழுவிக் கொண்டார். நாணக்கோ இவனுக்கு என்ன பித்து ஏறிவிட்டதா? ஏனெனில் அந்த மெய் மறந்த தழுவல் உயிரை உணர்த்துவதாக இருந்தது

இந்தக் கடுங்கானகத்துலே நீ எவ்வாறு இருப்பாய்? அச்சோ கொடிய மிருகம் உன்னை வந்து தீண்டுமே? பசியும்தான் மறந்தாயோ? துணை யாரும் இல்லையே? இனி நானிருப்பேன். மிகுந்த குளிர் உண்டாகுமே என் செய்வாய்? இனி நான் உன் துணை நிற்பேன் என்று சொல்லும்போது மெய்விதிர்க்க தனது கையிலிருந்த வில்லையும் அம்பையும் தன்னை அறியாது தளர்த்தினான். இந்த மனக்கிளர்ச்சியினூடே நாணனைப் பார்த்து இவர் தலையில் யார் பூ இட்டு நீர்வார்த்துச் சென்றது என்றார். அதற்கு நாணனோ!

கருணை தொடரும்....

பக்த மான்மியம் ஐம்பத்தைந்தாவது பிம்பாசி பத்தர் கதி

திரு. வே. சத்திய நாராயணன்

சென்ற இதழின் தொடர்ச்சி:

துவாரகைப் பற்று கண்ண பெருமானின் திருவடிகளைப் போற்றிச் சிலநாட்கள் வாழ்ந்தபின் உடன் வந்த பாகவதர்கள் மீண்டும் காசியை நோக்கிப் புறப்பட்டனர். பிம்பாசி மன்னனோ துவாரகையிலே மேலும் சில நாள் இருக்கும் எண்ணம் கொண்டு தற்போதைக்குத் தான் வரவில்லை என்று உரைத்தான். தன் மனைவி சீதையுடன் சிலகாலம் இருந்தபின் துவாரகைத் தீவிலிருந்து கடலைக் கடக்கக் கப்பலில் புறப்பட்டான்.

அவ்வாறு கடலில் பயணிக்கும் போது அழகு மிகுந்த துவாரகையைப் பிரிந்து வருவது பிடிக்காமல் மீண்டும் துவாரகைக்குத் திரும்பக் கருதித் தன் மனைவி சீதை காணாதவாறு கடலில் விழுந்தான். கப்பல் எதிர்கரை அடைந்தபின் கப்பலில் இருந்தோர் சீதையை இறங்குமாறு கூறத் தன் கணவனைக் காணாது கடற்றுறையில் தேடி மனம் சோர்ந்தாள். துணையை இழந்த அன்றிற் பறவை போல மனைவி சீதை மனந்தளர்ந்து மிகவும் தேம்பி வருந்தினாள்.

கண்ணபெருமான் அருள் அவ்வேளையில் கருங்கடலில் விழுந்த மன்னனைக் கண்ணபெருமான் தனக்கு பக்தி செய்த அன்பன் கடலில் அமிழாதபடி காத்துக் கையால் எடுத்து உண்மையான அன்பால் துவாரகையைக் காணும் ஆசை இருப்பின் இது பார்ப்பாய் என்று அருளொடு கூறினான். கடலின் நடுவே துவாரகையைக் காட்டப் பரவசமுற்ற அரசன் தன் சிந்தை மறந்து நின்றான். சாதாரண மாந்தரைப் போல் காட்சியளித்த கிருஷ்ண பகவான், சீரான சங்கு, சக்கர முத்திரை பின்னர் அமைப்பேன்; கரைக்குச் சேர்வாய் என்று கூறினான். கடலில் தனித்து இருத்தலை சற்றும் கருதாததவனாய் இனியும் கரைக்குச் செல்லேன் என்றான்

மன்னன் கூறியதைக் கேட்ட இறைவன் இவ்வாறு வலிய பிடிவாதம் செய்யவேண்டாம். உலகோர் உறுதியான விஷ்ணுபக்தியில் திளைத்த பக்தன் ஒருவன் துவாரகைசென்று கடலில் விழுந்து மாய்ந்தான் என்று பழிகூறுவர். துவாரகைக்குச்

செல்லவும் அஞ்சுவர்; எனவே உடனே கரையை அடைவாய் என்று கடிந்து கூறினான். பின் கண்களை மூட அறிவுறுத்திக் கணத்தில் கரையில் வந்து சேருமாறு செய்தான்.

காசிக்குச் செல்லல்

மன்னனும் கரைக்குத் திரும்பியதைக் கண்ட உலகோர் மிகமகிழ்ச்சியடைந்தனர். குளிர்ச்சியால் நடுங்கும் தன் கணவனைக் கண்ட சீதை துன்பக் கடலில் இருந்து மீண்டு அடைந்த இன்பத்தைச் சொல்லவும் முடியுமோ? தன் நாயகனின் திருவடியை வணங்கி இன்பக்கடல் ஆழ்ந்தாள். அதன் பின் அவிமுத்தம் என்னும் காசிக்குப் புறப்பட்டுச் சென்றனர். மிலேச்சனிடமிருந்து காத்தல் காசிக்குச் செல்லும் வழியில் ஒரு மிலேச்சன் அழகுடைய சீதையைக் கைப்பற்ற வந்தான். அவளோ, பரிவோடு பக்தர்களின் இடர்களை நீக்கும் கண்ணபெருமானின் திருவடிகளைத் தியானித்தாள். இறைவனும் படைவீரன் உருவத்துடன் வாளை ஏந்தியவனாய் விரைந்து செல்லும் குதிரையைச் செலுத்தியபடி வந்தான்.

"அடே! மிலேச்சா! நீ என்ன செய்யத் துணிந்தாய்?" என்று இடிபோலக் குரல் எழுப்பி அங்கே வந்த படைவீரனைக் கண்டவுடன் அஞ்சிய மிலேச்சன் விரைந்து அங்கிருந்து அகன்றான். பக்திப் பரவசத்தில் முன்னே சென்று கொண்டிருக்கும் அரசனிடம் வீரன் உருவில் இருந்த கண்ணன் சீதையைக் கொண்டு சேர்த்தான். காட்டில் தனியான பெண்ணைக் கள்வன் கைப்பற்றும் தீங்கு அமையாமல் காத்தாய் என்று அவள் வணங்கினாள். இறைவனும் எள்ளளவும் அஞ்சவேண்டாம் என்று கூறி மறைந்தான்.

அரசன் அறிவுரை நடந்த நிகழ்வையும் இறைவனின் பரிவையும் எண்ணி மன்னன் உளம் உருகினான். பின்னர் தன் மனைவியை நோக்கி இனியேனும் என்னோடு வரவேண்டாம். உன் மாநகருக்குச் செல்வாய்; என்பின்னே நீ அச்சத்தோடு வருவதைக் காண மனம் விரும்பவில்லை. தீங்கு நேரும்போது உன்னைக் காக்கும் வலிமையும் எனக்கில்லை என்று கூறினான்.

அரசன் கூறியதைக் கேட்ட மனைவி, நாதா! தாங்கள் மீண்டும் மீண்டும் என்னிடம் நகருக்கு போகுமாறு கூறவேண்டாம். எந்தத் தீமையும் வராதபடி கண்ணன் காப்பான்; இப்போது அவன் நிகழ்த்திய திருவிளையாடலை நீங்கள் அறிந்துகொள்ளவில்லையோ? ஆதரவு நல்கும் கண்ணனுக்கு அன்பரானவர்கள் துன்பம் அனுபவிப்பதுண்டோ? சொல்லுங்கள் என்று கேட்டாள். மனைவிக்கு

மறுமொழி கூற இயலாது பிம்பாசி மௌனமானான். தொடர்ந்து செல்லும்போது எதிரே வலிய புலி ஒன்று மறித்து நின்றது.

புலியை நல்வழிப்படுத்துதல்

பிளந்த பெரிய வாயுடன் வழியில் நின்ற புலியைக் கண்டு சீதை பயந்தாள். முன்னே செல்லும் தன் கணவனைத் தடுத்தாள். தன் மனைவிக்கு அஞ்சேல் என்று அருளுரைத்துப் புலிக்கு அருகே சென்றார். அதனைப் பார்த்து, மாந்தர் செல்லும் வழியில் நீ வந்து தோன்றியது எதற்கு? இவ்வழியில் செல்பவர்களின் தசையை உண்ணுதலும் எதற்கு? உன்னைப் போன்ற உயிர்களைக் கொல்வது குற்றமன்றோ? பார்ப்பவர்கள் அஞ்சும் புலியாகிய உடலில் நீ சேர்ந்தது முன்பு செய்த கொடிய தீவினையால் அன்றா? இப்போதும் பலர் பழிக்கும் கொடிய கொலையைப் புரிந்து உணவுண்பாய் என்றால் இந்த அடாத செயலும் பொருத்தமே என்று உன்னுயிரை வதைக்கும் துன்பவினைகள் விட்டுவிடுமோ? சொல்வாய் என்றார்.

மேலும், முன் எத்தனையோ பிறவிகள் எடுத்துப் பிறந்தாய்? எத்தனை உயர் பிறவி பெற்றாய்? எத்தனைதரம் பறவை விலங்கு வடிவெடுத்தாய்? பிறவிக்கு ஓர் எல்லை உண்டோ? அத்தகைய ஆன்ம வடிவாகிய நீ வினையால் புலியாகப் பிறந்துவிட்டாய். இது உன்னுடைய நிலைத்த ஆன்மாவிற்கு உற்ற கனவே அன்றி உண்மையில்லை. இதனை உண்மையாகச் சொல்லமுடியுமோ? வருங்காலத்தில் அழியப் போகும் ஆன்மாவிற்கு அன்னியமான உடலைச் சொந்தமானது என்று எண்ணுகின்றாய். எப்போதும் இருக்கின்ற ஆன்மாவைக் கொடிய நரகில் சேர்க்கின்ற வினையில் ஆழ்த்தலாமோ? விலங்கரசனாய நீஇனியேனும் தீவினைகளை விடு; இன்பம் பெறுகின்ற திறல் பெறுவாய்; இறந்த உடலில் அமைந்த தசையைத் தின்று வாழ்வாய் என்றார். தொடர்ந்து, இன்று முதல் என் சீடனாக இருப்பாய் என்று அன்பு காட்டிச் சொன்ன பிம்பாசி மன்னன் துளசி மாலை ஒன்றை அதன் கழுத்தில் இட்டு இனி கருணையுடன் வாழ்க என்று சொன்னான். கொடிய புலியும் அமைதி கொண்டு எழுந்து அவரை வலம் வந்து நன்கு வணங்கியபின் காட்டிற்குள் சென்றது. இக்காட்சி கொலையில் வல்ல புலையரும் நாணுமாறு இருந்தது.

தொடரும் ...

எங்கும் வெற்றி எதிலும் வெற்றி

- திரு. பச்சையப்ப தேவராசன்

மனம் தொடர்ச்சி

நம்முடைய இன்பத்திற்கும், துன்பத்திற்கும் இருப்பிடமாக அமைந்திருப்பது நம்முடைய மனம்தான்.

வெறும் வார்த்தையால் மட்டும் நாணயமாக இருந்தால் போதாது உடம்பும் அவ்வாறே இருக்க வேண்டும், மனதும் நாணயமாக இருத்தல் அவசியம்.

வாழ்க்கையில் எது இன்பம் என்பதைப் பற்றி ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகக் கூறுவார்கள் ஆனால் இன்பத்தை அளக்கக்கூடிய கருவி எதுவும் இல்லை.

பெருஞ் செல்வந்தனாய் இருந்து ஆடம்பர வாழ்வில் சிலரும், உலக நாடுகள் சுற்றிப் பார்ப்பதில் சிலரும், குடித்துவிட்டு மனைவியை அடித்து துன்புறுத்துவதில் சிலரும், சீட்டாடுதல் குதிரைப் பந்தயம் முதலியவற்றால் சிலரும் இன்பம் என நினைத்து வாழ்கின்றார்கள்.

சிலர் எதிலுமே ஈடுபாடு இல்லாமல் மனநிறைவின்றி வாழ்கிறார்கள். பிறந்ததிலிருந்து துன்பத்தையே அனுபவிக்கிறோம், மகிழ்ச்சியான வாழ்க்கை அமையவில்லையே என்று சோர்ந்து போய் வாழ்பவர்கள் பல பேர்.

வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டத்திலும் மனிதன் தன் சுற்றுப்புற சூழ்நிலைகளின் ஆதிக்கத்தை எதிர்த்தோ அல்லது இணைந்தோ போகத் தெரியாதவர்கள் தோல்வியைத் தழுவுகிறார்கள். இதனால், எண்ணத்திலும், உணர்ச்சியிலும், செயலிலும் மாறுபாடுகள் உண்டாக்கி மனம் குழம்பிப்போய் நாளடைவில் மன நோய்க்கு ஆளாகி விடுகிறார்கள்.

மனித மனம் பாதிப்புக்கு உள்ளானால், மனநலம் பாதிக்கப்படுகிறது. சிகிச்சை செய்து மனதை குணமாக்கலாம் என்றால் மனம் கல்லீரலைப்போல, இதயம் போல அது ஒரு உறுப்பு அல்ல.

உயிரை எப்படி பார்க்க முடியாதோ அதைப்போலவே! மனதையும் பார்க்க முடியாது! கடவுளைப் போலவே உருவம் இல்லாதது மனம்.

மூளை வடிவம் உடையது, மனம் வடிவமற்றது. மனமும் மூளையும் ஒன்றோடொன்று இணைந்துதான் செயல்படும். மனம் எதை நினைக்கிறதோ அதை மூளை செயல்படுத்துகிறது.

மனித உடல் மாபெறும் சக்தி கொண்டதைப் போல, மனித மனமும் மாபெரும் சக்திவாய்ந்தது. மனம், தன் உணர்வுகளை உடல் உறுப்புகளின் வாயிலாகத்தான் வெளிப்படுத்துகிறது.

மனம் துன்பப்படும்போது கண்கள் கலங்குகின்றன, கண்ணீர் வெளிப்படுகிறது. மனம் மகிழ்ச்சி அடையும்போது உதடுகள் வாயிலாக சிரிப்பை வெளிப்படுத்துகிறது, மனம் கோபப்படும் போது நரம்புகள் கிடைக்கின்றன. குரல் ஒலி மூலம் வெளிப்படுத்துகிறது. இப்படி, மனதின் விருப்பு வெறுப்புகளுக்கேற்ப உடம்பு செயல்படுகிறது. மன உணர்ச்சிகளை வெளிப்படுத்தும், அதுவே உடம்பில் பிரதிபலிக்கும்.

இரத்த அழுத்தத்தால் வருகின்ற மாரடைப்பைக் காட்டிலும், மன அழுத்தத்தால் தான் அதிகமான பேருக்கு மாரடைப்பு ஏற்படுகிறது.

மனம் மகிழ்ச்சியால் திளைக்கும்போது உடல் உறுப்புகள் பலமடைகின்றன. மனம் சோகத்தால் திண்டாடும்போது உடல் ஆரோக்கியம் பாதிப்படுகிறது கோபத்தால் இரத்த அழுத்தம் உண்டாகின்றது, கவலைப்படுவதால் இருதய நோய் உண்டாகின்றது. ஏமாற்றம், தோல்வி ஏற்படும் போது மனச்சோர்வு உண்டாகிறது.

மனம் குழம்பிப்போவதால்தான் நிறைய நோய்கள் உண்டாகின்றன. உடல் நலத்தை பாதிக்கும் நோய்களில் காய்ச்சல், வயிற்று வலி, தலைவலி போன்ற சாதாரண நோய்களும், இருதய நோய், புற்றுநோய், கல்லீரல் நோய் போன்ற கடுமையான நோய்களும் வருகின்றன.

மனநலம் குறையும்போது தன்னிலை அறியாமல் பொருத்தமற்ற தேவையில்லாத செயல்களில் அவன் ஈடுபடுகின்றான். அவனைப் பைத்தியக்காரன் என்று சொல்லி, இந்த சமூகம் ஒதுக்கி வைக்கிறது,

அவ்வாறு அவனை ஒதுக்குவதால், அவனுடைய வாழ்வு சீர் குலைவதோடு, அவன் குடும்பமும் பாதிக்கப்படுகின்றது. எனவே உடல் நோய்க்கு உடனடி சிகிச்சை அளிப்பதைப் போல, மன நோய்க்கும் உடனடி சிகிச்சை அளிக்க வேண்டும்.

இந்த மனநோய் ஏன் உண்டாகிறது? பாரம்பரியம், குடும்ப சூழ்நிலை, உடலமைப்பு, பொருளாதார நெருக்கடி அளவுக்கு அதிகமான வேலைப்பளு, திறமைக்கு மீறிய வேலை, திருப்தியற்ற வேலை, மேலதிகாரிகளின் கெடுபிடி அச்சுறுத்தல் போன்ற பல்வேறு காரணங்களால் தான் மனநோய் உண்டாகிறது. இந்த நோயை மனச்சிதைவு என்று மருத்துவ நிபுணர்கள் கூறுகின்றனர்.

இந்த மனச்சிதைவைப் பற்றி ஒரு மனநல மருத்துவரிடம் விவரம் கேட்டோம், அவருடைய கருத்தை இங்கே அப்படியே தருகிறோம்.

மனச் சிதைவு ஒரு தீவிரமான மனநோய். உடலில் மிகக் கடுமையாகப் பாதிக்கும். சரியான காரணங்களைக் கண்டுபிடிக்க முடியாதிருக்கும். முழுதாய் குணமடையச் சாத்தியக் கூறுகள் குறைவாய் இருக்கும். புற்றுநோய் போல மனதை தீவிரமாகத் தாக்கும் நோய் மனச் சிதைவு

இந்நோய் மூளையில் சில பகுதிகளில் ஏற்படும் ரசாயன மாறுதல்களினால் வருவதாகச் சில ஆய்வுகள் கூறுகின்றது. இந்நோய்க்கு இதுதான், இது மட்டுமே காரணம் என்று கண்டுபிடிக்கவில்லை

இந்நோய் எவருக்கும் வரலாம், ஆண் பெண், இன மதம் மொழி கலாச்சார பேதமின்றி, பொருளாத ஏற்றத் தாழ்வுகளுக்கப்பாற்பட்டு 15 வயது முதல் 45 வயதுக்குள் பொதுவாக இந்நோயின் முதல் தாக்கம் ஏற்படும். எல்லா மன நோய்களையும் போலவே இதிலும் தூக்கமின்மை, பசியின்மை, நாட்டமின்மை, சிரத்தையின்மை, ஞாபகமின்மை, கவனமின்மை இருக்கும்.

அடிப்படையில்லாத சில தவறான நம்பிக்கை இந்நோயில் காணப்படும். இது சந்தேகமாகவும், பிறர் தம்மை துன்புறுத்தி வருவது போன்ற அச்சமாகவும்... பல விதங்களில் வெளிப்படும்.!

இந்நோய் ஆரம்பிக்கும்போதே எல்லா அறிகுறிகளும் தென்படுவதில்லை. ஆரம்பத்தில் மனம் பாதிக்கப்பட்டதால் தூக்கமின்மை, பசியின்மை என்று தான் தெரியும். பிறகு கீழ்க்கண்ட அறிகுறிகள் வெளியாகும். உடையில் சிரத்தையின்மை, சொந்த சுகாதாரத்தில் அக்கறையின்மை, செய்து வந்த வேலைகளில் விருப்பமின்மை, இது நாள் வரை விரும்பிய பொழுதுபோக்குகளில் (பாடல், படிப்பு, விளையாட்டு, டிவி முதலியன) போன்றவை கூட பிடித்தமின்மை, உணர்ச்சிகளை வெளிப்படுத்த இயலாமை, பேச்சிலும் செயலிலும் குழப்பம் பிறகு தானே பேசிக்கொள்வது, எல்லோரும் தன்னைப் பற்றியே பேசுவதாய் சந்தேகப்படுவது, டிவி, ரேடியோ போன்ற சாதாரண சாதனங்கள் கூட தன்னை இயக்குவதாய் நினைப்பது, காதில் குரல்கள் ஒழிப்பது, குரல்களின் கட்டளைக்கேற்ப நடந்து கொள்வது, எல்லாவற்றையும் விட முக்கியமாகத் தனக்கு நோய் உள்ளது, தன்னால் முன்போல் இருக்க முடியவில்லை என்பதை உணராமல் இருப்பது.

மனம் விரியும்....

வண்ணச்சரபரின் சத்திய சூத்திரம்

தமிழ்ச்செம்மல் நெல்லை ந. சொங்கலிங்கம்

தோற்றுவாய்;

திக்கெல்லாம் புகழும் திருநெல்வேலி நகரில் தொண்டர் சந்நிதிச் சாலையில் அமைந்துள்ள சாலியர் தெருவில் 1839 முதல் 1898 வரை வாழ்ந்து பல்லாயிரம் பாடல்கள் பாடிப் பைந்தமிழை வளப்படுத்தியவர் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். கௌமார நெறியைத் தமிழகமெங்கும் பரப்பிய தமிழ்க்கொண்டல் வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் ஆவார். பழனியிலும் திருவாமாத்தூரிலும் கௌமார மடங்களை நிறுவி ஆறு சமயங்களையும் ஒன்றிணைக்கப்பாடுபட்ட துறவி வண்ணச் சரபர். இலக்கண, இலக்கிய நூல்களோடு இறையுணர்வுகளும் சிற்றிலக்கியங்கள் பலவும் புனைந்து தமிழுக்குத் தொண்டு செய்த தமிழ்த் துறவி. சுவாமிகள் இயற்றியுள்ள சத்திய சூத்திர நூற்பா வடிவில் அமைந்த நூல், இந்த நூல் பேரூர் சாந்தலிங்க சுவாமிகளின் குரு பூசை விழாவின் போது 1971ஆம் ஆண்டு, பழனி கட்டைச் சின்னாம்பட்டி நிலக்கிழார் திரு. பழனிவேலுத் தேவர் என்பவரால் பதிப்புச் செய்யப்பெற்று 108 யானை வேள்வி நடத்திப் பெரும்புகழ் சேர்ந்த சிரவணபுரம் கௌமார மாடாலயத் தலைவர் தவத்திரு. சுந்தர சுவாமிகளால் வெளியிடப்பெற்ற நூலே சத்திய சூத்திரம் மற்றும் சத்திய வாசகம் என்னும் இரு நூல்களாகும்.

நூல்நுவல்பொருள்

சத்திய சூத்திரம் பன்னிரண்டு தலைப்புகளில் பத்துப்பத்து விற்பாக்களாக மொத்தம் 120 நூற்பாக்கள் அடங்கிய நூல், நூற்பயன்! வெண்பாவாகும். இதன் காப்புச் செய்யுள் ஒன்று வருமாறு.

பத்திசித்தி முத்திப் பயனடைவார்க்(கு) ஆதரவாம்
சத்திய சூத்திரநூல் இயற்றுதற்(கு) எத்திசையில்
வாழும் எவரும் மறக்கரிய மெய்ப்பொருளாய்ச்
சூழும் குருவே துணை சுவாமிகள்

எந்தப் படைப்பின் முகப்பிலும் குருவே துணை என்று பதிவு

செய்துவிட்டுத்தான் நூலியற்றும் மரபைப் பின்பற்றுவது போன்றே சத்திய சூத்திரம் நூலையும் வண்ணச்சரபர் தொடங்கியுள்ளார். இதன் உட்பிரிவுகள் வருமாறும்

1.தெய்வத்தன்மை-10	7.வேளாளர் தன்மை 10
2.குருத்துவம் 10	8.பஞ்சமர் தன்மை 10
3.தவநிலை 10	9.கருமம்(தொழில்நிலை)10
4.வேதியர் 10	10.உபாசனை10
5.அரசர் 10	11.ஞானம்10
6.வணிகர் தன்மை	12.பொதுஞாயம்10

இந்நூலின் முன்னுரை வழங்கியவர் சுவாமிகளின் கொள்ளுப்பேரன் திரு. தி.மு.சங்கரலிங்கம் ஆவார். இறுதியில் வரும் நூற்பயனைப் பார்ப்போம்.

"பாடியலுந் தேற்பிடித்துப் பாரதியாள் பாருலகம்
கேடிலா வண்ணம் கிளத்துவித்தாள் ஈடில் புகழ்ச்
சத்திய சூத்திர நூல் சார்ந்த தொழுகுவார் பலர்க்கும்
சித்தி முத்தி நல்குவதுண் டே"

இந்நூற்பயன் சொல்லும் வெண்பாவின் கீழ் மெய்யடியார் திருவடிகளே சரணம், தெய்வமே துணை என்றும் கூறிமுடித்துள்ளார். இந்நூலில் வண்ணச்சரபர் வலியுறுத்தும் கொள்கைகளில் ஒன்றிரண்டைப் பார்ப்போம்;

"தெய்வம் ஒன்று உளதெனத் தேறிப் பணிவது
மானிடப்பிறப்பில் வந்தோர் கடன் (சத்திய..1)"

என்பதன் வாயிலாக மண்ணுலகில் பிறந்த மாந்தரின் கடமை உணர்த்தப்பட்டது.

"மழைவறக் திடலால் மாநிலம் தளர்நாள்
வாள் வலித் தடக்கை மன்னன் உண்ணும்
நல்லுண வனைத்தும் நாய்மலம் போன்மே" (சத்திய அரசர்.8)

என மன்னனின் கடமையை வலியுறுத்தியுள்ளார். கருமம் என்னும் ஒன்பதாவது தலைப்பில் சுவாமிகள்,

"வேதம் சொல்லினும் விரிஞ்சன் ஆதியர்
நேரிற் கூறினும் நிசர்க்கு உரித்தம்
கொலையுலை செய்தல் கூடா(து) அன்றே"(சக்திகருமம்.1)

உணவுக்காகவும் மருந்திற்காகவும் உயிர்க் கொலை புரிதல்

கூடாது என்பதே வண்ணச்சரபரின் உயிர்க்கொள்கையாகும்.

வண்ணச்சரபர் உபாசனை என்னும் பத்தாவது தலைப்பில்

"தெய்வ நாட்டம் சிறிதும் இல்லா
மானிடர் யாவரும் மரை யனையாரே"(சக்தி உபாசனை, 1)

தெய்வ நாட்டம் இல்லாதவர்கள் விலங்கு போல்வர எனக்கடும் சொற்களால் சுட்டுவது ஆழ்ந்து எண்ணத்தகும்.

"சுத்த பூசை நோய்தருமாயின்
பேயும் தெய்வம் ஆம்; பிணப்பலி ஏற்கின்
தெய்வமும் பேயாம், எனும் இதுவே (சத்திய.ஞாயம்,1)

என்று கூறுவதனால் வண்ணச்சரபர் கொலை உயிர்ப்பலி செய்தலை ஏற்கவும் இல்லை; போற்றவும் இல்லை. உயிரிரக்கம் வண்ணச்சரபர் வலியுறுத்தும் உபர் கொள்கையாகும்; வண்ணச்சரபர் வழியைப் பின்பற்றி வாழ்வோம்! இறையருள் பெறுவோம்!!

76ஆம் ஆண்டு சுதந்திர தின விழாவை ஒட்டிய சிறப்புக் கருத்தரங்கு

- கி.சுப்பிரமணியன் (ஐ.கே.எஸ்)

நாட்டுப்புறப் பாடல்களிலும் சிற்றிலக்கியங்களிலும் காணப்படும் விடுதலை உணர்வு வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகளின் பாடல்களில் விடுதலை உணர்வு

சென்ற இதழின் தொடர்ச்சி:

சரபர் போற்றிய மூன்றாவது இஸ்லாமியப் புலவர் தமிழுலகம் பெரிதும் மதித்த சவ்வாதுப் புலவர். முருகன் அருளால் மந்திரம் ஓதிப் புலமையின் உச்சத்தைத் தொட்டவர். சரபர் பல பாடல்களில் இவரைப் பாராட்டி உள்ளார்.

"கோலத்தில் ஒருதுலுக்கன். குணத்தில் ஒரு கௌமாரன்
ஆலத்தில் கொடும் சினமும் அமிழ்தில் இனித்திடும் அன்புட்
சீலத்தால் கொடுவாழ்ந்தான் செயலனைத்தும் எனச்
ஞாலத்தில் பிறர் உரைப்ப நான் அறிந்தது சொல்வார்
இவ்வளவே.

என சவ்வாதுப் புலவரின் சமயம் கடந்த பரநிலையைப் பாடுவார் சரபர்.

இப்படி அன்று தேவைப்பட்ட விடுதலை உணர்வுக்குமு அடித்தளமாக சமூக ஒற்றுமை, சமய ஒற்றுமை, மொழிப் பற்று இவற்றைப் புலப்படுத்தி, வீர சுதந்திரம் வேண்டி நின்று அவர் பாடியது இலக்கிய வரலாறு.

இந்திய சுதந்திரத்தின் 76 ஆவது ஆண்டு, சிறப்புப் பார்வையில் தமிழ் இலக்கியம் என்ற இந்தச் சிறப்புக் கருத்தரங்கில், அருளாளர் ஒவ்வொருவர்க்கும் இடம் தந்துள்ளமை நன்றிக்குரியது. வண்ணச் சரபம் தண்டபாணி சுவாமிகளின் பாடல்களில் காணப்படும் விடுதலை உணர்வுக்கு மூலநோக்கமான நாடு மொழிசமூகசமய ஒருமைப்பாடு பற்றி மிகச் சுருக்கமாக இதுவரை கூறப்பட்டன. நேரடியாக விடுதலை பற்றிய அவர் கருத்துக்கள் இனி முன்வைக்கப்படுகின்றன. அன்றைய சமூகம், மக்கள் பட்ட துன்பங்கள் முன்னர் குறிக்கப்பட்டன. இவற்றிற்கு ஆட்சியாளரின் சூழ்ச்சி, வஞ்சகம், வன்முறை போன்ற கொடுங்கோல் ஆட்சியை

மூலவேர் என்பதை உணர்ந்த வண்ணச்சரபர் ஆங்கிலியர் அந்தாதி என்ற ஒரு நூலைப் பாடினார். 100 பாடல்கள். ஆங்கிலேயர் ஆட்சி எப்படிப்பட்டது, மக்கள் எவ்வாறு துன்பப்பட்டார்கள், அவற்றிலிருந்து மீள வழி யாது என்று பலவாறாகச் சரபர் எண்ணி உருகியிருக்கிறார்.

ஆங்கிலேயர் பண்புகள்;

'புல்லறிவாண்மை பொலி ஆங்கிலியர்'
'இரக்கம் அணுவள வேனும் இல்லாதவர்கள்'
'நல்லோரை ஏசித் திருட்டுத் தன்மை கைவந்த கைவந்த ஆங்கிலியர்' கொடுங்கோல் அரசர் சிகாமணி
'கேட்டுக்கு ஓர் கொள்கலமாம் ஆங்கிலியர்;
'மிக்க துயர் செய்யும் ஈனப் புண்ணியர்' 'பொய் பொருள் சேர்க்கும் புலைக்கொடும் தீயர்'

இவையும் இவை போன்றவையும் ஆங்கிலியர் அந்தாதியில் வரும் சொற்கள். ஏறக்குறைய 100 பாடல்களிலும் ஆங்கிலியரின் தீய குணங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன. வெறுப்பு, சினம், ஆற்றாவை, பழிவாங்கல் என்ற வல்லுணர்ச்சிகளின் உருவங்களாக வெள்ளையரை சரபர் காட்டுகிறார். இவை சரபரின் குமுறல்கள் மட்டுமல்ல; ஆங்கிலேயர் செய்த வன்முறைகளை வேறு வழியின்றி ஏற்றுக் கொண்ட மக்களின் உள்ள வெளிப்பாடும் ஆகும். அப்படி அவர்கள் என்ன செய்தார்கள்? சரபரோ நேரில் "துன்பம் என் கண்காணச் செய்திடும் ஆங்கிலியர்" என்று பாடுகிறார்.

கடல் சூழ்ந்த நிலமகள் பாவம் பொறுக்காது கதறினாள். தெய்வத்தை நம்பிய நல்லோரை ஏசினார். அருளாண்மை சற்றும் அறியாதவர்கள். உலகத்து இழிகுணம் உடையவர்கள் எல்லாரும் சேர்ந்து நீசத்தனத்தைத் தனியாகச் செய்பவர்கள். பிரித்தாலும் ஆட்சியில் வல்லவராயச் சாதி, சமய, குல வேறுபாடுகளைக் காட்டி மக்களை அச்சுறுத்தினார்கள். அவர்களின் வரிக்கொடுமை பற்றி முன்னரும் கூறப்பட்டது. அதனையும் சரபர் மனமுருகப் பாடியுள்ளார் அவர்களுடைய கொடுமைக்கு அஞ்சி 'வேற்றூர்கள் தோறும் அலைந்து இரந்துண்டு' அன்பர்களும் மக்களும் வாடினர்.

என்ன தீர்வு? யார் செய்வது? வலிமை மிக்க போர்க்கருவிகள், அடங்கிப் போன சிற்றரசுகள் ஒற்றுமையில்லாத சமயவாதிகள், சாதியால் பிரிந்த ஏழைகள் இப்படி இவர்கள் இருக்க எதையும் கண்டுகொள்ளாமல் வாழ்ந்த அதிகாரிகள்....... இந்தச் சூழலில் சரபர் கையறு நிலைக்கு ஆளாகிறார். மனித முயற்சிகள் ஏதும் இல்லாத போது தெய்வ அருளாவது கிடைக்காதா என்று

ஒவ்வொரு சந்நிதியின் முன்பு நின்று மனம்முருகி வேண்டுகிறார். கண்ணீர் உகுக்கிறார்; 'எப்படியிருந்த யாரொடு நோ கேன் யார்க்கு எடுத்துரைப்பேன்'

என்ற மணிவாசகர் சொற்கள் உள் இருந்திருக்கும் தமிழகம்? கடல் கடந்து போய் தொலைதூரக் கிழக்கு நாடுகளை எல்லாம் அதிகாரத்தால் அல்ல அன்பால் ஆண்ட பேரரசுகள் அழிந்து, உள்நாட்டிலேயே அடிமைகளாகி விட்டார்களே!

'நான் வணங்கும் முருகா! சூரனை அழித்த வேல் உன் கையில் இல்லையா? ஆங்கிலியர் ஆட்களை விடக் கொடியவர்கலாயிற்றே? ஏன் அவர்களை அழிக்க நீ வரக் கூடாதா? என்பது போல! சிவன், திருமால், கலைமகள், விநாயகர் என எல்லாத் தெய்வங்களிடமும் முறையிட்டுச் சுவாமி அழுத குரல் இப்போதும் கேட்கிறது.

பேராசிரியர் பொ.நா.கமலம் அவர்கள் ஞாயிறு ஆயிரம் நூலுள் காணப்படும் செய்திகளைக் குறியீடுகள் எனக் குறித்துப் பல புராணங்களிலிருந்து சரபர் மேற்கோள்கள் காட்டுவதை அற்புதமாக விளக்கியுள்ளார் (ஆய்வு மாலை 126,127)

கண்ணீர் விட்டு அழுது உழல்கின்றேன்
கல் கூபத்திடை கங்கையை நேர்
தெண்ணீர் ஆறு எழுமாறு என்மேல்
சிறப்பு நோக்கம் செய்யாயோ?

கற்கள் நிறைந்துள்ள கிணற்றுள் கங்கைத் நீரைத் தேடும் சுவாமி, பாறை ஆங்கில ஆட்சி; கங்கை விடுதலை என்பதைப் புலப்படுத்துகிறார்.

பாஞ்சாலியைத் துச்சாதனம் துகில் உரியும் காட்சி, பாரத நாட்டைச் சீரழிக்கும் அந்நிய ஆட்சியின் கொடுமையாக உருவகம் கொள்கிறது.

"**ஒண்ணுதல் பிடி அனையால் பொன்தானை உரித்த பாதகர்**" என்ற சொற்களில் சுவாமியின் உருவகம் தெரிகிறது.

"பாரதிக்கு முன்பே அடிமை விலங்கால் கட்டுண்டு கிடந்த பாரத அன்னையைப் பாஞ்சாலியாகப் பாடிய பெருமை சுவாமிகளையே சாரும்"

என்று பேராசிரியர் போ.நா.கமலாவின் திறனாய்வு அற்புதமானது. வண்ணச் சரபரின் விடுதலை உணர்வு முழுவதையும் உணர்த்துவதும் ஆகும்.

முற்றும்...

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் குடமுழுக்குப் பெருவிழா

முருகப்பெருமானின் அறுபடை வீடுகளில் மூன்றாம் படை வீடாக பக்தர்களால் போற்றப்படும் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் திருக்குட நீராட்டு விழா 17ஆண்டுகளுக்குப் பிறகு தைத் திங்கள் 13 ஆம் தேதி (27.01.2023) நடைபெற்றது. இதற்கான களப்பணிகள் 18.01.2023 ஆம் தேதி முதல் தொடங்கியது.

பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் நீராட்டு விழாவின் போது நடந்த திருக்கோயில் தொன்மையையும் முருக அடியார்கள் காலம் காலமாக பின்பற்றிய வழிபாடுகள் பற்றி ஆராய்ந்து அரசுக்கு அறிக்கை அளிக்க சமயப் பெரியோர்கள், ஓய்வு பெற்ற உயர்நீதிமன்ற நீதியரசர், சிற்ப சாஸ்திரம் கற்றறிந்த ஸ்தபதிகள், ஆகம வல்லுநர்கள், மக்கள் பிரதிநிதிகள் அடங்கிய குழு நாள் (02.09.2022) அமைத்து தமிழக அரசு ஆணையிட்டது. அதில் மாண்பமை உயர்நீதிமன்ற நீதியரசர் திரு.ஆர்.பொங்கியப்பன், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தவத்திரு பேரூராதீனம், தவத்திரு சிரவையாதீனம், தலஅர்ச்சகர்கள் திரு.தி.கும்பேஸ்வர குருக்கள். ஆகியோர் உட்பட 15 பேர் இடம்பெற்றிருந்தனர். மேற்கண்ட வல்லுநர் குழுவின் முதல் ஆலோசனைக்கூட்டம் 14.10.2022 அன்று காலை 10.00 மணியளவில் பழனி அருள்மிகு தண்டாயுதபாணி சுவாமி திருக்கோயில் தலைமை அலுவலக கூட்ட அரங்கில் நடைபெற்றது. திருக்கோயிலுக்குச் சென்று குருமகா சந்நிதானங்கள் திருக்குட நீராட்டு, திருப்பணிகள் சார்ந்து நடைபெற்று வரும் பணியினைப் பார்வையிட்டனர்.

சிரவையாதீனம், பேரூராதீனம், பழநி ஆதீனம் ஆகிய குருமகா சந்நிதானங்கள் 24.01.2023 புதன்கிழமையன்று பழநி குடமுழுக்கின் இரண்டாம் கால வேள்வியில் கலந்துகொண்டனர். வேள்வி நிறைவின்போது திருமுறை விண்ணப்பம், முருகன் பிள்ளைத்தமிழ் பாடப்பட்டது. 27.01.2023 வெள்ளிக்கிழமை காலை 4.30 மணிக்கு 8 ஆம் கால யாகபூஜை நடைபெற்றது. குன்றக்குடி அடிகளார், சிரவை ஆதீனம், பேரூர் ஆதீனம், மயிலம் பொம்மபுர

ஆதீனம் ஆகிய குருமகா சந்நிதானங்கள் மூலவர் விமான மண்டபத்தில் நின்று வழிபாடு செய்தனர்.

கலசங்களுக்கு புனிதநீர் ஊற்றப்பட்டு திருக்குட நீராட்டுப் பெருவிழா சிறப்பாக நடைபெற்றது. அப்போது ராஜகோபுரம், தங்கவிமானம் மற்றும் பக்தர்கள் மீது ஹெலிகாப்டரில் இருந்து மலர் தூவப்பட்டது.

மேலும் இந்நிகழ்வில் இந்து அறநிலையத்துறை அமைச்சர் சேகர்பாபு, உணவுத்துறை அமைச்சர் சக்கரபாணி, அறங்காவலர் குழுத் தலைவர் சந்திரமோகன், உள்ளிட்ட அறங்காவல் குழுவினர்கள், இணை ஆணையர் நடராஜன், தலைமையிடத்து இணை ஆணையர் சுதர்சன், இணை ஆணையர் மேனகா, கந்தவிலாஸ் செல்வக்குமார் உள்ளிட்ட பல்வேறு முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

காஞ்சிபுரம் திருமுறை அருட்பணி

அறக்கட்டளை நடத்தும்

19-ஆம் ஆண்டு கோடைக்கால சமயப் பயிற்சி

காஞ்சிபுரம் திருமுறை அருட்பணி அறக்கட்டளையின் சார்பில், 2023 மே மாதம் (04-05-2023 முதல் 13-05-2023) முடிய 10 நாட்கள் இலவச சைவ சமயப் பயிற்சி வகுப்பு, சின்ன காஞ்சிபுரம் திருமுறை **அருட்பணி மாளிகையில்** நடைபெறவுள்ளது. இப்பயிற்சி வகுப்பில் சைவ சித்தாந்த நூல்கள் விரிவாகப் பயிற்றுவிக்கப்படும்.

கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் (அடிப்படைக் கல்வித் தகுதி பெற்ற ஆண், பெண் இருபாலரும்-70 வயதுக்குள் உள்ளவர்கள்) விண்ணப்பிக்கலாம். ரூ.5/- அஞ்சல் தலை ஒட்டிய, தங்கள் முகவரி எழுதிய உரையுடன் (4 X 9) கீழ்க்காணும் முகவரிக்கு கடிதம் எழுதி பயிற்சிக்கான விண்ணப்பமும், விதிமுறைகளையும் பெற்றுக்கொள்ளலாம். பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் ஏப்ரல் 24-ஆம் நாளுக்குள் வந்து சேரவேண்டும். பயிற்சி, உணவு, உறைவிடம் இலவசம். பயிற்சிக்கு தேர்ந்தெடுக்கப்பட்ட அன்பர்கள் மட்டும் நுழைவுக்கட்டணம் ரூ. 250/- செலுத்த வேண்டும்.

தொடர்பு முகவரி: சு.சதாசிவம், நிறுவனர், திருமுறை அருட்பணி அறக்கட்டளை, எண். 7, பங்காரம்மன் தோட்டம், காஞ்சிபுரம் 631501.
செல் : 98406 38813

குருபர தத்துவ நூல்
பாறைக் கிணற்றுச் சருக்கம்

காஉமாபதி உதவி நூலகர்

பாடல் 3

கூவல்விதி உணர்ந்தவர்எங் குள்ளா ரென்னக்
குவலயத்தில் விசாரித்துக் குறிப்பிள் ளோராய்
மூவர்களைத் தேர்ந்(து) அவர்க்காம் மூன்று சீட்டும்
மொழிபவன்வே றுளன்எனும் சொல் மொழிஓர் சீட்டு
சேவலந்தோட் குகனெதிரிட்(டு) எடுக்கச் சொன்னேன்
செவ்வல்ஊர் ஈளுவன்பேர் திகழ்ந்த(து),அன்னோற்(கு)
ஆவலுற்(று) ஆள் அனுப்பிவர வழைத்து வேண்டும்
அவைஉதவி ஓரிடம்தேர்ந்(து) அமைஎன் றேனே

அருஞ்சொற்பொருள்: குவலயம் - உலகம். கூவல் - கிணறு

கிணறு வெட்டும் விதிகளை அறிந்தவர்கள் உலகில் எங்குள்ளார்கள் என்று விசாரித்து தேடி மூன்று பேர்களைத் தேர்ந்தெடுத்தேன். அவர்களின் மூன்று பெயர்களையும் அதோடு இம்மூன்று பேரும் அல்லாதவரா? என்று நான்கு சீட்டுகளை எழுதி சேவற்கொடியான் குகன் திருமுன் வைத்து எடுக்கச் சொன்னேன் அதில் நெற்கட்டான் செவ்வலைச் சேர்ந்த ஈளுவன் பெயர் இருந்தது. மிக விருப்பத்தோடு ஆள்அனுப்பி வரவழைத்தேன். அவனிடம் நல்ல நீர் கிணறு அமைக்க ஓர் இடம் காட்டி உதவுமாறு கேட்டேன்.

பாடல் 4

முன்னவன் வழிபாடு

அத்தலத்தை அளந்தேதோ கணக்குச் செய்திட்(டு)
அரைக்கடிகை ஆலோசித்(து) அடியேன் இச்சை
வைத்தமடா லயமதன் கீழ்ப் பாகத் துற்(று) ஓர்
வாழையிலை யிட்(டு) அதன் மேல் வழுவைச் சென்னி
வித்தகனை இரண்டுருவத் தமைத்தான், செங்கை
வேலனும்சேர்ந் திருந்ததுபோல் வியந்து கொண்டேண்
எத்தனையோ சனங்கள் வந்து கூட்ட மிட்டார்
இயைந்தநிவே தனங்களமைத்(து) எடுத்தான் தூபம்.

அருஞ்சொற்பொருள்: சனங்கள் - மக்கள்.

அந்த இடம் முழுவதையும் அளந்து ஏதோ ஒரு கணக்கப் போட்டுப் பார்த்தான். அரைநாழிகை நேரம் யோசித்தான். நான் நினைத்தபடியே மடலாயத்தின் கிழக்கு பாகத்தில் அமைந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தான். அந்த இடத்தில் ஒரு தலைவாழை இட்டு அதன்மேல் யானைமுகக் கணபதியின் இரண்டு உருவங்களை அமைத்தான். நானும் செங்கை வேலவனும் உடனிருப்பதாக எண்ணிக் கொண்டேன். இந்நிகழ்வைக் காண ஊர்மக்கள் எல்லாரும் கூடிவிட்டனர் அவர்கள் முன்னிலையில் இறைவனுக்கு வேண்டிய படையல்களை எல்லாம் படைத்து தூபதீபங்கள் காட்டிப் பூசை செய்தான்.

பாடல் 5

தூபமிட்டுக் கருப்பூர தீப மேற்றிச்
சுழற்றும்போ(து) இருகருடன் தொனித்தங்(கு) உற்ற
ஆ !பரமாச் சரியமெனப் பலருஞ் சொன்னார்
அசத்தியம்அன்(று) அயில்வேலன் ஆணை கண்டீர்
தாபமுற்றுந் தவிர்த்தருளும் கங்கை வாழும்
தலம் இதென்றான்; நீரெனும் சொல் சாற்ற வில்லை
பூபறித்தால் தோன்றும்விதம் எழுதித் தந்(து) ஓர்
புளிய முளை அதில் நிறுவப் புகன்றிட் டானே

தூபம் இட்டுக் கற்பூரத்தைத் சுற்றிக் காட்டும்போது இரண்டு கருடன்கள் பறந்து வந்து சுற்றி ஒலியை உண்டாக்கின. இதைக் கண்ட அனைவரும் ஆ! வியந்து என்ன ஆச்சரியம் என்றனர்.இது பொய்யில்லை கூர்வேல் குமரனின் ஆணை என்பேன். துன்பத்தைப் போக்கி அருளும் கங்கைவாழும் இடம் இது என்றனர் யாரும் தண்ணீர் இருக்கும் இடம் என்று சொல்லவே இல்லை. இந்த இடத்தில் பூமியைத் தோண்டும்போது மண்ணுக்குள் இருக்கும்நிலை நீர் வரும் அளவு போன்ற விவரங்களை எழுதித் தந்தான். அந்த இடத்தில் அடையாளமாக ஒரு புளியமரத்தின் கிளையைச் சீவி முளைக்குச்சி செய்து அடித்து வைக்கச்சொன்னான்

- தொடரும்

வண்ணச்சரபம் தண்டபாணி சுவாமிகள் வரலாறு பல பதியினிற்செய் பண்புறு நிகழ்ச்சிகள்

திருநெல்வேலித் தலத்தில் சுவாமிகள் தங்கியிருக்கும் காலத்தில் முருகப்பெருமானது அருளுரைப்படி, அருணகிரிநாத சுவாமிகள் புராணத்தை 450 விருத்தப் பாடலால் எல்லா நயங்களும் இனிது அமையப்பாடி அரங்கேற்றினர். புலவர் புராணம் என எழுபத்திரண்டு புலவர்கள் வரலாற்றைத் தொகுத்து, தெய்வீகப் புலமையை விளக்கி 3000 கவிகளில் பாடினர். திருவாமாத்தூர்த் தலபுராணம். வடமொழியிலிருந்ததை 1000 கவிகளில் பாடினர். தமது அநுபவமும் வரலாறும் அமைய, உபாசனையை விளக்கி 1000 பாடலிற் குருபரதத்துவம் என்ற பெயரில் பாடினர். இவை வரலாற்று நூல்கள்.

கௌமார முறைமை (கருமம், பத்தி, ஞானம் என்னும் முப்பிரிவில் 300 கவி). நானிலைச் சதகம், தியானாநுபூதி, ஞான அந்தாதி போன்ற பதினாறு நூல்களும், இலக்கன நூல்களும், கலம்பகம், யமகம், திரிபு, ஏகபாதம், நிரோட்டம் என்ற இதழகல் அந்தாதிகளும், பிள்ளைத்தமிழ் ஐந்தும், பதிகச் சதகம், சதகப்பதிகம், ஏழாயிரப் பிரபந்தம், தில்லைத் திருஆயிரம், பழனித் திருஆயிரம், திருவரங்கத் திருஆயிரம், தெய்வத் திருவாயிரம் போன்ற தொகைப் பிரபந்தங்களும், மநுநெறித்திருநூல், சத்திய சூத்திரம், வருக்கக்குறள் போன்ற உலகப் பொதுவான நீதி நூல்களும், அரசாட்சி நூல் என்ற அரசியல் நூலும், முசுகுந்த நாடகம், துதிக் கீர்த்தனைகளான நாடகத்தமிழ்ப் பாக்களும், உரை நடையில் சத்திய வாசகமும், தெய்வத் துதி நூல்கள் தலக் குறிப்பாகவும், பொதுவாகவும் பல ஆயிரக் கணக்கில் இயற்றியுள்ளனர். அவ்வச் சமயங்களில் கூறிய தனிப் பாடல்கள் பல. இவை யாவும் ஒரே தடவையில் பாடி, பனையோலை ஏட்டில் தாமே எழுதியும் தொகுத்தும் வைத்துள்ளனர். இப்படியுள்ள பாடல்கள் 50000 ஆகும். இதன்றி, ஊடல் காரணமாக நெருப்பு, ஆற்றுநீர் கடல் நீரில் சிதைத்த கவிகட்கு அளவு கூறமுடியாது.

தொடரும்

நூல் மதிப்புரை

காா.உமாபதி உதவி நூலகர்

தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வாழ்க்கை வரலாற்று வண்ணம் (மூலமும் உரையும்) 2005

ஆசிரியர் : சிரவை ஆதீனம்: தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள்

உரையும் பதிப்பும் : சிரவையாதீனக் கவிஞர் புலவர் ப.வெ.நாகராசன் பி.லிட்.

கொங்கு நாட்டில் தோன்றிய தமிழ் கவிஞர்களில் தலைசிறந்தவராக விளங்கியவர் சிரவை ஆதீனம் குருமகாசன்னிதானம் தவத்திரு கந்தசாமி சுவாமிகள் ஆவார்கள். 15000க்கும் மேற்பட்ட நூல்களைப் படைத்த தவத்திரு கந்தசாமி சுவாமிகள் வரலாற்றினை சிரவை ஆதீனத்தின் மூன்றாம் குருமகாசந்நிதானம் தவத்திரு கஜபூசைச் சுந்தர சுவாமிகள் பாடியுள்ளார். சுவாமிகள் படைப்புகளில் இலக்கிய வகையில் தலை சிறந்ததாக இந்நூல் விளங்குகிறது. குறிப்பிட்ட வாய்ப்பாட்டில் அமைந்த ஓசையே திரும்பத் திரும்பச் செய்யுளில் வருவது வண்ணமாகும். இந்நூலிலும் அதேபோன்று அமைந்துள்ளது. இருப்பினும் இதில் வந்துள்ள வண்ணப்பா மரபு பிற்காலத்தது.

இவ்வகைப்பா எட்டுஅடிப்படை அலகுகளால் அமைந்துள்ளது. முப்பெரும் வண்ணப்பாவில் இது கலைவண்ணம் ஆகும். இந்த கலைவண்ணம் எனப்படுவது இரண்டு கலைகள் ஓரடியாக அமைந்த கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என்கிறது வண்ணத்தியல்பு நூல். கலை வண்ணம் பல வகைப்படும் அவற்றுள் இந்நூலில் அமைந்துள்ளது வாழ்க்கை வரலாற்று வண்ணமாகும்.

தவத்திரு. கஜபூஜை சுந்தர சுவாமிகள் தம்குருநாதராகிய சிரவை கந்தசாமி சுவாமிகளின் வாழ்க்கை வரலாற்றை ஒரு வண்ணமாக 1951ஆம் ஆண்டு இயற்றி அளித்தார்.

1975 ஆம் ஆண்டு தவத்திரு கந்தசாமி சுவாமிகள் பற்றிய பல வரலாற்றுச் செய்திகளை உள்ளடக்கிய தலைசிறந்த

வண்ணமாக இந்நூலினை மாற்றியமைத்தார். பல்வேறு விதமான மாறுதல்களைச் செய்து இந்நூலச் சிறப்புற அமைத்தார். இந்நூல் தவத்திரு சுந்தர சுவாமிகளின் கம்பீரமான வண்ணக்குறிப்பைப் பெற்று ஆற்றொழுக்காக அமைந்துள்ளது. காப்பு வெண்பா தவிர்த்து 146 அடிகளைக் கொண்ட சிறப்பான வரலாற்று நூலாகவும் அமைந்துள்ளது. தவத்திரு கந்தசாமி சாமிகளின் வரலாற்றினை இயன்ற அளவு இச்செய்யுளில் உள்ளடக்கியுள்ளார் ஆசிரியர் ப.வெ.நாகராசன் அவர்கள் ஒவ்வொரு வரிக்கும் தனித்தனியே விளக்கம் தராது செயலின் இறுதியில் பாடலில் உள்ள கடினமான சொற்களுக்கு மட்டும் உரை இயற்றியுள்ளார்.

இச்செய்யுளைப் பொருத்தமட்டில் அவர் உரையே போதுமானதாகும். அதில் கூறப்பட்ட கடினமான சொற்கள் மட்டுமன்றி சில சொற்களின் உள்ளார்ந்த கருத்துக்கும் சிறப்பான உரை கண்டுள்ளார் ஆசிரியர். இந்நூல் மிகச் சிறந்த வரலாற்று நூலாகும். சிறந்த வண்ணத்தில் பாடப்பெற்ற வரலாற்று நூல்களில் இந்நூலுக்குத் தனித்த இடம் உண்டு.

இந்நூல் முதல் பதிப்பாக 1951இல் தவத்திரு கந்தசாமி சுவாமிகளின் மூன்றாவது குருபூசை நினைவு மலராக வெளி யிடப்பட்டது. பின்னர் 1975 ஆம் ஆண்டு நூலாசிரியர் சுவாமிகளைப் பற்றிய வேறு சில செய்திகளைச் சேர்த்து இரண்டாம் பதிப்பாக வெளியிட்டார். இன்னூல் இரண்டாம் பதிப்பாக வெளியிடப்பட்டாலும் முதல் பதிப்பிற்கும் இரண்டாம் பதிப்பிற்கும் பல வேறுபாடுகள் இருந்ததன. பின்னர் ஜூன் 2005 ஆம் ஆண்டு தவத்திரு கஜபூசை சுந்தர சுவாமிகளின் 11 ஆம் ஆண்டு குருபூசையின் போது மூலமும் உரையும் சேர்த்து இந்நூல் வெளியிடப்பட்டது.

முதற் பதிப்பு 14.06.2005

திருக்குறள் கதை

கா. உமாபதி

அவாவினை ஆற்ற அறுப்பின் தவாவினை
தான்வேண்டு மாற்றான் வரும் 367.

அறிய வேண்டியவற்றை அறிந்து, நல்வழியில் அடங்கி ஒழுகவாவினை முழுவதும் அறுத்து விட்டால், கெடாமல் வாழ்வதற்கான நல்வினைகள், தான் விரும்பியபடியே வந்து ஒருவனுக்கு வாய்க்கும்

வாழ்க்கையில் இன்பம் ஒரு பக்கம்; துன்பம் மறு பக்கம். இன்பங்களில் மட்டுமே இறுதி வரை மிதந்த செல்வந்தனும் இல்லை; துன்பங்களில் மட்டுமே இறக்கும் வரை துடித்த ஏழையும் இல்லை. ஒவ்வோர் இன்பத்தின் முடிவிலும் துன்பம் ஒன்று இருக்கும். இதேபோல், ஒவ்வொரு துன்பத்தின் எல்லையிலும் ஓர் இன்பம் பிறக்கும்.

பிரம்மதத்தன் என்ற மன்னன் வாரணாசியை ஆண்டபோது, அவனிடம் சஞ்சயன் என்ற தோட்டக்காரன் பணி புரிந்தான். தோட்டத்தில் இருந்து கனிகளையும், மலர்களையும் பறித்து, தினமும் அரண்மனையில் கொண்டு சேர்ப்பது அவனது வழக்கம்.

ஒரு நாள் அரசன் அவனிடம், "நமது தோட்டத்தில் ஏதாவது புதுமை உண்டா?'' என்று கேட்டான். "சில நாட்களாக கலைமான் ஒன்று தோட்டத்தில் சுற்றித் திரிகிறது'' என்றான் சஞ்சயன். "அந்த மானை உன்னால் பிடித்துத் தர முடியுமா?'' என்று அரசன் ஆசையுடன் வினவினான்.

"கொஞ்சம் தேன் கொடுங்கள். அந்த மானைக் கொண்டு வருகிறேன்'' என்ற சஞ்சயன், தேன் நிரம்பிய ஒரு குடுவையை அரசனிடமிருந்து பெற்று, தோட்டத்துக்குத் திரும்பினான். ஆளரவம் கேட்டதுமே மருண்டோடும் மானைப் பிடிக்க, அங்கிருந்த புல்வெளியில் தேனைத் தெளித்தான். மானின் விழிகளில் படாமல் மறைந்து நின்றான். யாருமற்ற தைரியத்தில் கலைமான் புல்லை மேய்ந்தது. தேனில் நனைந்த புல்லை மேய்ந்தபோது, மான் அந்தச் சுவையில் மயங்கியது. அதன் அருகில் மெள்ள வந்து நின்றான் சஞ்சயன். ஆளைப் பார்த்ததும் மான் மருண்டது. ஆனாலும் தேன்சுவைப் புல்லை விட்டு விலக அதற்கு மனம் வரவில்லை. சஞ்சயன், புல்லில் தேனைத்தெளித்து அரண்மனையை நோக்கிச் செல்லும் வழி முழுவதும் பரப்பினான். புல்லை மேய்ந்தபடி கலைமான் அரண்மனைக்குள் சென்று சிக்கியது. மனிதர்களும் இப்படித்தான்... சிற்றின்ப ஆசைகளில் உழன்று, உலகத் துன்பங்களில் சிக்கி விடுகின்றனர் என்கிறது இந்த கதை.

சிரவையாதீனத் தலைவர் பங்கு பெறும் நிகழ்ச்சிகள்

22.03.2023	புதன்	சென்னை முதல்வர் விழா
24.03.2023	வெள்ளி	அவிநாசி கோயில் பார்வையிடல் *காரணம்பேட்டை கூப்பிடு விநாயகர் திருக்கோயில் வேள்வி
25.03.2023	சனி	எம்புதூர் (கேரளா) சிவசித்த ஆலயம் வேள்வி ஊர்வலம்.
26.03.2023	ஞாயிறு	காரமடை கண்ணார்பாளையம் மந்தை மாரியம்மன் திருக்கோயில் நீராட்டு.
27.03.2023	திங்கள்	நாமக்கல் முத்துப்பட்டி காசிவிசுவநாதர் திருக்கோயில் நீராட்டு. * பெருமாநல்லூர் அம்பிபாளையம் மாகாளியம்மன் திருக்கோயில் நீராட்டு
29.03.2023	புதன்	துடியலூர் அறக்கட்டளை குமாரசாமி கவுண்டர் குருபூசை விழா.
01.04.2023	சனி	அகமதாபாத் ஆச்சார்யா சபா.
09.04.2023	ஞாயிறு	புதுவயல் பிரசன்னா பழனியப்பன் இல்ல வேல் வழிபாடு.
10.04.2023	திங்கள்	சிங்கை கற்பக விநாயகர் திருக்கோயில் நீராட்டு

பங்குனி மாத திருவிழாக்கள்

தமிழ்	ஆங்கிலம்	கிழமை	வழிபாடு
பங்குனி 01	மார்ச் 15	புதன்	விசாகம்/தேய்பிறை அஷ்டமி (பைரவர்) வழிபாடு)
பங்குனி 05	மார்ச் 19	ஞாயிறு	பிரதோசம்
பங்குனி 07	மார்ச் 21	செவ்வாய்	அமாவாசை
பங்குனி 11	மார்ச் 25	சனி	சசதுர்த்தி/கிருத்திகை
பங்குனி 13	மார்ச் 27	திங்கள்	சஷ்டி
பங்குனி 18	ஏப்ரல் 01	சனி	ஏகாதசி
பங்குனி 19	ஏப்ரல் 02	ஞாயிறு	மகம்
பங்குனி 20	ஏப்ரல் 03	திங்கள்	பிரதோசம்
பங்குனி 22	ஏப்ரல் 05	புதன்	பௌர்ணமி/பங்குனி உத்திரம் விசாகம்
பங்குனி 26	ஏப்ரல் 09	ஞாயிறு	மகம்
பங்குனி 27	ஏப்ரல் 10	திங்கள்	சங்கடகர சதுர்த்தி
பங்குனி 30	ஏப்ரல் 13	வியாழன்	தேய்பிறை அஷ்டமி (பைரவர்வழிபாடு)

சிவனிரவுப் பெருவிழா 2023. இந்துசமய அறநிலையத்துறை அமைச்சர் மாண்புமிகு. சேகர்பாபு அவர்கள் வழிபாடு செய்தார்கள். ஆயிரக்கணக்கான அடியார் பெருமக்கள் அவிநாசியப்பருக்குத் தங்கள் கரங்களால் திருமுழுக்கு செய்து வழிபட்டனர். இரவு முழுவதும் கலை நிகழ்வுகளும் நடைபெற்றது.













பொதுத்தேர்வு எழுதவுள்ள கௌமார மடாலயப் பள்ளி மாணாக்கர்கள் குரு மகா சந்நிதானங்களைச் சந்தித்து ஆசி பெற்றார்கள்



திருச்செந்தூர் கந்தசஷ்டி விழாவின் தத்துவ விளக்க நாட்டிய நிகழ்வினைபக்தி நாட்டிய நிகேதன் நிறுவனர் கருணாசாகரி குழுவினர்கள் வழங்கினார்கள், குருமகா சந்நிதானங்கள் எழுந்தருளி ஆசி வழங்கினார்கள், திருமிகு. கிருஷ்ணராஜ் வாணவராயர் உள்ளிட்ட மிக முக்கிய நபர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர்

Kaumara Amudham (Tamil Monthly) Periodical - March 2023
Regd. with the Registrar of Newspapers for India under No. Tam 14083/2001.



சத்வித்யா சன்மார்க்க சங்க ஆண்டு விழாவில் தவயோகி சுத்தானந்த பாரதியார் அவர்கட்கு வரவேற்பு

அனுப்புதல் : கௌமார அமுதம், கௌமார மடாலயம், சின்னவேடம்பட்டி, கோவை - 49.